# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

**மனு எண் : 0367 / 2017 / ஊராட்சி**

**ஆணை எண் : 058 / 2017**

**நாள் : 27.03.2017**

A. மரிய மைக்கேல்,
7/159, அந்தோணியார் கோயில் தெரு,
காவல் கிணறு, திருநெல்வேலி மாவட்டம். — மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம். — எதிர்மனுதாரர்

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், காவல் கிணறு ஊராட்சியில் வசிக்கும் திரு. A.மரிய மைக்கேல் என்பவர், அவருடைய 20.03.17 நாளிட்ட மனுவில், அவருக்கு சொந்தமான இடம் பெருங்குடி கிராமம், பகுதி–2, புல எண்1735/6B2 ல் 8000 ச.அடி பரப்பில் சுற்று சுவருடன் உள்ளது என்றும், அவர் இல்லாதபோது அவருடைய நிலத்தின் வழியாக உச்சுநீர் 3" குடிநீர் குழாய் முன்னாள் பஞ்சாயத்து தலைவரால் போடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, அவருடைய நிலத்தின் வழியாக போடப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பை துண்டித்து, முறையான தெருவழியாகக் கொண்டு செல்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து நீதி வழங்குமாறு கோரியுள்ளார்.

2. 2014 – ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு"என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/4/2017

செயலாளர்

பெறுநர்

திரு.ஏ.மரிய மைக்கேல்,
7/159, அந்தோணியார் கோயில் தெரு,
காவல் கிணறு, 627 105.
திருநெல்வேலி மாவட்டம்.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்,
திருநெல்வேலி.

உதிரி - 5